# www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID –** Padasalai.net@gmail.com

# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 5

## மொழிப்பயிற்சி

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 30

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ்டின்

I. அனைத்திற்கும் விடையளி 9x2 = 18

1. தமிழாக்கம் தருக

அ) Checkout ஆ) Mini Meals

2. தமிழாக்கம் தருக

அ) Lobby ஆ) Tips

3. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

அ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்

ஆ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்

4. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

5. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

Scanned with CamScanner

6. 'பெற்றார்' - இச்சொல்லின் வேர்ச்சொல், பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர் ஆகியவற்றை எழுதுக

7. கலைச்சொற்களுக்குத் தமிழாக்கம் தருக

அ) Ratio ஆ) Factor

8. மயங்கொலிச் சொற்களை பொருள் விளங்கும்படி ஒரே சொற்றொடரில் அமைத்து எழுதுக

அ) அளி, அழி ஆ) காலை, காளை

9. இணைச்சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக

அ) பாயும்படுக்கையும் ஆ) செக்கச்செவேல்

## II. அனைத்திற்கும் விடையளி

10. கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக. 1x4 = 4

எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
வெறுமணல் பரப்பாய் விரிந்து கிடக்க
ஓணான்கள் முட்டையிட
கள்ளிகள் பிழைத்திருக்க
பிள்ளைகள் விளையாட
பன்றிகள் மேய்ந்திருக்க
வானத்தில் மேகமுண்டு
சூரியனில் மழையுண்டு



Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



 எம்.ஏ. ஜெலஸ்டின்

காகமோ குருவியோ
நிழல் ஒதுங்க
ஆறெங்கும் முள்மரமுண்டு
எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
ஆற்றுக்கோர் ஊருண்டு
ஊருக்கோர் சனமுண்டு
வாழ்வைப்போல் ஒன்றுண்டு

– இளங்கோ கிருஷ்ணன்


11. தமிழாக்கம் தருக — 1×4 = 4

In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life - and that is the main theme of this chapter - let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

12. எண்ணங்களை எழுத்தாக்குக 1×4 = 4



எம்.ஏ. ஜெலஸ்டின்,
முதுகலைத் தமிழாசிரியர்,
கார்மல் மேனிலைப்பள்ளி,
நாகர்கோவில்.
கன்னியாகுமரி மாவட்டம்
9843448095

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

# இயல் - 3
## உள்நிலைத் தேர்வு - 5
## மொழிப்பயிற்சி

வகுப்பு : 12

விடைகள் மதிப்பெண் : 30

I அனைத்திற்கும் விடையளி :-

1. தமிழாக்கம்

அ) வெளியேறுதல்

ஆ) சிற்றுணவு

2. அ) ஓய்வறை

ஆ) சிற்றறை

3. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்கள் :

அ) காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.

ஆ) மாறனைப் பேச்சுத்திறனில் யார் வெல்ல முடியும்.

4. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல் :-

நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

5. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல் :-

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான் ; அவர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தைப் போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

6. பெற்றார்

வேர்ச்சொல் - பெறு
பெயரெச்சம் - பெற்ற
வினையெச்சம் - பெற்று
வினையாலணையும் பெயர் - பெற்றவன்

7. தமிழாக்கம்

அ) விகிதம்

ஆ) காரணி

8. அ) கர்ணன் கொடை அளித்ததால் அவன் புகழ் அழியாமல் இருக்கிறது.

ஆ) உழவர்கள் காளை மாடுகளைக் காலையில் வயலுக்கு ஓட்டிச் சென்றனர்.

9. அ) பாயும் படுக்கையும்

முதுமையில் பாயும் படுக்கையுமாக இருந்த பெற்றோரை வினிதா நன்கு கவனித்தாள்.



Scanned with CamScanner
Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

ஆ) செக்கச்செவேல்

கிளியின் அலகு செக்கச்செவேல் என்றிருக்கும்.

II 10. அனைத்திற்கும் இடமளி :-

எங்கள் ஊரில் எங்களுக்கும் ஓர் ஆறு உண்டு. பொதுவுடைமை கொள்கையைச் சொல்லாமல் சொல்லும் எங்கள் ஊர் ஆறு வெளிப்படுத்தும் செய்திகளோ ஆயிரம். வெள்ளம் கரைபுரண்டு ஓடாத நேரத்திலே வெற்று மணல் பரப்பாய் விரிந்து கிடக்கும் எங்கள் ஆற்றின் ஓரத்திலும் நடுவிலும் உயர்திணை, அஃறிணை என்ற வேறுபாடுகளைக் காண்பது அரிதாகும். ஆமைகள் முட்டையிட, கள்ளிகள் செழித்திருக்க எங்கள் வீட்டு பிள்ளைகள் விளையாட பன்றிகளும் மேய்ந்திருக்கும் வெற்று மணலாய் பரந்து விரிந்து கிடக்கும் எங்கள் ஊர் ஆறானது உணர்த்தும் பொதுவுடைமை சித்தாந்தம் புதுமையிலும் புதுமை.

வானம் மேகத்தை ஏற்றுக் கொள்ளும், சூரியன் மழையை ஏற்றுக்கொள்ளும், ஆற்றங்கரையோரம் வளர்ந்திருக்கும் முள்மரம் கூட காகம், குருவிகளுக்கு இடம் கொடுக்கும், எங்கள் ஊர் ஆறானது உணர்த்தும் சமத்துவம், சகோதரத்துவம், பொதுவுடைமை, பொதுநலன் போன்றவை எங்கள் ஊரில் வாழும் சனங்களுக்கு ஏன் புரிவதில்லை.

ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஓடிவரும் ஆறானது ஒதுக்குவதில்லை. எங்களை அதன் உடலில் விளையாட



Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

கூட அனுமதிக்கின்றது. ஆனால் ஆற்றின் ஓரத்தில் ஒதுங்கி வாழ்கிறோம் என்பதற்காக எங்கள் ஊரின் நன்றாக வாழ்கின்றவர்கள். அவர்களின் வாழ்வைப் போல எங்களுக்கும் ஒரு வாழ்வுண்டு என்பதனை ஏன் மறுக்கின்றனர்.

ஒன்றே குலமாக வாழ்ந்திட எங்கள் ஊர் ஆறு உணர்த்தும் பாடத்தை என்று இவர்கள் கற்றிடப் போகின்றார்களோ....!

11. தமிழாக்கம்:

மனித வளர்ச்சி நோக்கத்தின் அடிப்படையில் கல்வி என்பது நிறைவான ஒன்றாகும். மாறாக வேலைபிழைப்பிற்கான அல்லது நிறைவிற்கான வழி அல்ல. கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமை மட்டுமின்றிக் கல்வியே மக்களின் பொருளாதார, சமுதாய மற்றும் அரசியல் சிக்கல்களுக்கான வாசலைத் திறக்கும் திறவுகோலாகவும் இருக்கின்றது.

12. எண்ணங்களை எழுத்தாக்குதல்:-

தலைவன் தலைவி குழந்தைகள் உள்ள தனிக் -குடும்பங்களானது இன்றைய சமூக ஊடகங்களின் தாக்கத்தினால், கூடி மகிழ்ந்து கொண்டாட வேண்டிய இல்லங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி தீவுகளாக மாறியுள்ளன. குடும்ப உறுப்பினர்களுக்கிடையே பெரிய இடைவெளி காணப்படுகின்றது. ஒரே வீட்டில்



Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

வாழ்ந்தாலும் அவர்கள் தங்களுக்குள் முகத்தோடு முகம்பார்த்து உறவாடும், உரையாடும் நேரத்தைக் கணக்கிட்டால் வேதனையே மிஞ்சும். சமூக ஊடகங்களை மன அளவில் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் இவர்கள் குடும்ப உறுப்பினர்களுடன் முகம் கொடுத்துப் பேசாமல் முகநூல், புலனம், அளாவி, கீச்சகம் போன்ற சமூக ஊடகங்களில் தங்கள் நேரத்தை வீணாகக் கழிக்கின்றனர்.

கூடிப்பேசி சிரித்து மகிழ வேண்டிய குடும்ப உறுப்பினர்கள் இன்று சமூக ஊடகங்களில் மூழ்கிப் போயிருப்பதால் தங்களது புன்னகையை மறந்து, உரையாடலை மறந்து வாழ்கின்றனர். ஒரே வீட்டில் வாழ்கின்றவர்கள் தங்கள் கருத்துகளை நேரிடையாகக் கூறாமல் சமூக ஊடகம் மூலமாகப் பகிர்ந்து கொள்கின்ற ஒரு புதிய கலாச்சாரம் பரவி வருகின்றது.

மூன்று உறுப்பினர்களே இருக்கும் இத்தனிக்குடும்ப உறுப்பினர்கள் மூன்றுபேரும் தனித்தனியாக சமூக ஊடகத்தின் பிடியில் சிக்கியிருப்பதைப் பார்க்கையில், இவர்கள் எப்படித் தங்களது உணர்வுகளை, அன்பை, மன அழுத்தங்களைப் பகிர்ந்து கொள்ள, அளாவளாவி மகிழ, எப்படி நேரம் கிடைக்கும். இன்று குடும்பப் பொறுப்புகளை மறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் அவலச் சமூகம் நம்மிடையே வளர்ந்து கொண்டே வருகின்றது.

இந்நிலையை மாற்ற குடும்ப உறுப்பினர்களோடு உரையாடுவோம்; அன்பை வளர்ப்போம்; அவர்களோடு நேரத்தைச் செலவிட தயாராவோம்.

Karan Stationery & Papers, Salem.



Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 6

செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம்

குறுவினா, சிறுவினா, நெடுவினா, மனப்பாடல்

வகுப்பு : 12

நேரம் : 1 மணி

மதிப்பெண் : 50

இமரி தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ் டின்

I. குறுவினா

1. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

2. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக

3. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

4. இராமன் குகனிடம் கூறியவை யாவை?

5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.

6. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

II. சிறுவினா

7. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக

8. சங்க காலத்திலேயே ஆண்மையச் சமூக முறை வழுவாக இருந்ததற்கான சான்று தந்து நிறுவுக.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ்டின்

9. "வருபவர் எவராயினும்
நன்றி செலுத்த" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

10. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமைகளை எழுதுக.

## III. நெடுவினா 3×6=18

11. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

12. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

13. 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ..... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க

## IV அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக 1×4=4

14. 'குகனொடும் ...' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக

எம். ஏ. ஜெலஸ்டின்,
முதுகலைத் தமிழாசிரியர்,
கார்மல் மேனிலைப் பள்ளி,
நாகர்கோவில்
கன்னியாகுமரி மாவட்டம்
9843448095

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 6

செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம்.

வகுப்பு : 12 விடைகள் மதிப்பெண் : 50

I குறுவினா

1. தாய்மொழிக் குடும்பங்களின் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருப்பதால் பெண் குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன. தாய்வழிச் சொத்துகள் பெண்களுக்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஒரு மருதத்திணைப் பாடல் தெளிவாகவும் அழகாகவும் கூறுகிறது.

2. புக்கில் :

புக்கில் என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிக்கும். "துகள் அறுகேள்வி உயர்ந்தோர் புக்கில்" என்ற புறநானூற்றுப் பாடலில் வரும் புக்கில் என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிக்கின்றது.

தன்மனை :

திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோர்களிடம் இருந்து பிரிந்து தனியாக வாழும் இடம் "தன்மனை" என அழைக்கப்பட்டது.



Scanned with CamScanner
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

3. மனித வாழ்க்கையில் நடக்கின்ற எதிர்பாராத நிகழ்வுகளான பேர் ஆனந்தம், சற்று மனச்சோர்வு, சிறிது அற்பத்தனம், நொடிப்பொழுதேயான விழிப்புணர்வு எல்லாம் நமது இல்லத்திற்கு வரும் எதிர்பாராத விருந்தாளிகளாக உருவகப்படுத்தி இருக்கின்றார்.

4. இராமன், குகனிடம் நீ என் தம்பி; இலக்குவன் உனக்கும் தம்பி; என் மனைவியாகிய சீதை உன் உறவினள்; கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகம் முழுவதும் உனக்கு உரியது. நான் உன்னுடைய கட்டளைக்கு ஏற்ப பணிபுரியும் பணியாளாவேன்.

5. காற்புள்ளி இல்லாமல் தொடர்களை எழுதினாலோ, இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ, தொடரில் உள்ள சொற்கள் அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் மாறுபட்ட பொருளையே தரும்.

சான்று

1. அவள், அக்கா வீட்டிற்குச் சென்றாள்.
2. அவள் அக்கா, வீட்டிற்குச் சென்றாள்.

இச்சான்றின் முதல் தொடரில் அந்தப்பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் என்ற பொருளை உணர்த்துகிறது அத்தொடரில் உள்ள காற்புள்ளி.

இரண்டாவது தொடரில் உள்ள காற்புள்ளியால் அந்தப் பெண்ணின் அக்காள் அவளது (தனது) வீட்டிற்குச் சென்றாள் என்ற பொருள் வேறுபாட்டைத் தருவதை அறியலாம்.

Kaveri Stationery & Papers, Salem.



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

6. "திருவாரூர்செல்வன்" என்ற தொடரே சரியான தொடர்.

'அனைத்தொகை சொல்லுக்கிடையில் வல்லினம் மிகுதல் கூடாது' என்ற இலக்கண விதியின்படி 'திருவாரூர்செல்வன்' என்ற அனைத்தொகை சொல்லுக்கு இடையில் வல்லினம் மிகாது.

II சிறுவினா

7. பண்டைய காலத்து குடும்பத்தின் தொடர்ச்சியே கூட்டுக் குடும்பம் :-

விரிந்த குடும்பம் :

தனிக்குடும்ப அமைப்பில் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழ்வது விரிந்த குடும்ப அமைப்பு முறையாகும்.

கூட்டுக் குடும்பம் :

இந்த விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே கூட்டுக் குடும்பமாக இன்றைய சமூகத்தின் மாற்றம் பெற்றுள்ளது. கூட்டுக் குடும்பம் என்பது பெற்றோர், அவர்களது மணமாகாத பிள்ளைகள், மணம் முடித்த பிள்ளைகள், அவர்களது துணைவர், அவர்களது பிள்ளைகள் இணைந்து வாழ்வதாகும். சில நேரங்களில் கூட்டுக் குடும்பங்களில் பெற்றோரின் உடன்பிறந்தவர்கள், பெற்றோர்களின் தாய், தந்தை இரத்த உறவால் பிணைக்கப்பட்ட நேர்வழி, கிளைவழி உறவினர்கள் என அனைவரும் ஒரே வீட்டில் ஒரே குடும்பமாக வாழ்வது கூட்டுக் குடும்பமாகும்.



Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
Scanned with CamScanner

8. சங்க காலத்திலேயே ஆண்மையச் சமூக முறை :-

ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன்னுடைய கணவனின் தந்தையகத்தில் வாழ வேண்டும் என்ற நிலை இருந்தது. திருமணத்திற்குப் பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்த போது தலைவனின் தாய் தலைவிக்குச் 'சிலம்புகழி' என்னும் நோன்பு செய்தாள் என்பதனை,

"நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நல்மணம் கழிக"

என்ற ஐங்குறுநூறு பாடல் மூலம் அறியலாம்.

மணமக்களின் வாழிடம் கணவனின் இல்லமாக இருந்திருக்கிறது. சங்க காலத்தில் தந்தை வழிக் குடும்ப முறை மிகவும் வலுவான, ஒரு பரவலான முறையாக இருந்துள்ளதைப் பொருள்வயிற்பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் எனப் பல்வேறு சமூக காரணங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

9. இடம் :

இப்பாடல் வரிகள் ஜலாலுத்தீன் ரூமி அவர்கள் எழுதிய கவிதையின் ஆங்கில மொழிபெயர்ப்பின் சில பாடல்களை என்.சத்தியமூர்த்தி என்பவர், "தாகங்கொண்ட மீனொன்று" என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். அத்தொகுப்பில் உள்ள "விருந்தினர் இல்லம்" என்னும் பகுதியில் இவ்வரி இடம் பெற்றுள்ளது.



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

பொருள் :

இவ்வுலகில் வாழ்கின்ற நாம், தினமும் சந்திக்கின்ற எதிர்பாராத இன்பம், துன்பம், அவமானம், வக்கிரம், வஞ்சனை எதுவானாலும் அதற்கான நன்றி செலுத்த வேண்டும்.

விளக்கம் :

மனித வாழ்க்கை விருந்தினர் இல்லம் போன்றது. நம் வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் எல்லோரும் ஒரே மனநிலையில் வருவதில்லை. ஒரே மாதிரியான செய்திகளையும் கொண்டு வருவதில்லை. அது போன்றே நம் வாழ்க்கையும் சந்திக்கும் அனுபவங்களான ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு, வக்கிரம், அவமானம், வஞ்சனை, துக்கம் என்பவை பல வாழ்வின் வடிவங்களில் வரும். அவை நமக்குப் புதிய உவகையையும், புதிய வழிகாட்டுதல்களையும் தருவதால் "வருபவர் எவராயினும் நன்றி செலுத்த வேண்டும்" என்று கவிஞர் கூறுகிறார்.

10. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமைகள் :

இராவணன் சீதையைச் சிறையெடுத்துச் சென்ற போது அதனைத் தடுத்து சண்டையிட்டுக் காயப்பட்டுத் தன் உயிரை இழந்தான் சடாயு. தனக்காகச் சடாயு தன்னுடைய உயிரை இழந்ததை அறிந்த இராமன் தன் தந்தை தசரதனின் நண்பரான சடாயுவைத் தன் தந்தையாக எண்ணினான்.

தந்தைக்கு மகன் எவ்வாறெல்லாம் இறுதிச்சடங்கு



Scanned with CamScanner
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

மேற்கொண்டாரோ அதேபோல, பாரிப்பவர்கள் [illegible]
பழமையான கதைகளையும் அதில் கூறப்பட்டவைகளையும் சிந்தனைக்கட்டளை
எண்ணையும் கொண்டு வந்து [illegible] பறிபட அவர்
மேல் தோன்றிய [illegible] அங்கே, பூங்காவன
நான், மனைவியால் மேடையைத் திருத்தமாக அமைத்தான்.
நன்னிலையும் கண்டு வந்தான்.

இறுதிச் சடங்கு செய்யப்பட்டிருக்கும் மேடைக்குத் தன் தந்தையாகக் கருதிய சடாயுவைத் தன் பெரிய கைகளில் தூக்கி வந்து இறுதிச் சடங்குகளை மேற்கொண்டார்.

III குறுவினா

11. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்புக் கட்டமைக்கப்படுகிறது :-

குடும்பம்

* தலைவன் தலைவி இணைந்து குழந்தைகளுடனோ, குழந்தைகள் இல்லாமலோ இணைந்து வாழ்ந்து வரும் அமைப்பே குடும்பமாகும்.
* மனித சமூக அமைப்பை ஒப்பிடும்போது மிகவும் சிறிய அமைப்பாகும்.
* இந்தச் சிறிய அமைப்பில் இருந்துதான் மனித சமூகம் என்ற பரந்த அமைப்புக் கட்டமைக்கப்படுகிறது.
* இவ்வமைப்பிற்கு அதன் இயங்குநிலைக் கருத்தாக்கத்தின் மூலமே "குடும்பம்" என்ற பெயர் வந்தது.

Kaveri Stationery & Papers, Salem



Scanned with CamScanner

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## மனிதன் ஒரு சமூக உயிரி:-

* மனிதன் ஓர் உயிரியல் விலங்கு மட்டுமல்ல. அவன் ஒரு சமுதாய விலங்காவான்.
* மனிதர்கள் தங்கள் வாழ்வில் பெரும்பகுதியைக் குடும்பத்தில்தான் செலவழிக்கின்றனர்.
* குடும்பமே மக்களின் உயிரியல், உளவியல், வாழ்வியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்கிறது.
* குடும்பத்தில் வாழ்வோர் உயிரியல் பிணைப்புகளை மட்டும் கொண்டவர்களாக இல்லாமல் சமுதாயப் பிணைப்புகளையும் கொண்டவர்களாக இருப்பதே மனித சமூக கட்டமைப்பிற்கான அடித்தளமாக இருக்கிறது.

## குடும்பம் சமூகத்திற்கான களம்:-

* குடும்பம் தனிமனிதருக்கானும் சமுதாயத்திற்காகவும் பெரும் பங்காற்றுகிறது.
* மனித சமூகத்தின் அடிப்படைகளான பண்புகளான அன்பு செலுத்துதல், பொருளாதாரப் பகிர்வு, பொழுதுபோக்கு, பாதுகாப்பு, சமயச் செயல்கள், கல்வி பெறுதல் ஆகியவை குடும்பத்திலே கற்பிக்கப்படுகின்றன.
* சமூகத்தின் பண்பாட்டைக் குழந்தைப் பருவத்திலே குடும்பம் கற்றுக் கொடுக்கின்றது.
* சமுதாயத்தின் நெறிமுறைகள் அன்றாட வாழ்வில் பின்பற்றபட வேண்டிய பழக்கவழக்கங்கள் பொருளாதாரச் செயல்களாகச் செய்யும் முறைகள்



Scanned with CamScanner
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

சமுதாய சமய வாழ்வில் ஆற்றவேண்டிய கடமைகள் போன்ற எண்ணற்ற வகைகளில் குடும்பம் குழந்தைகளுக்குப் பயிற்சியளிப்பதால் மனித சமூகம் சிறப்பாகக் கட்டமைக்கப்படுகின்றது.

* பண்பாட்டு மயமாக்கல் நிகழ்ச்சியில் குடும்ப உறுப்பினர்கள் ஒரு மாதிரி குழுவாகச் செயல்படுகின்றனர்.
* குடும்பம் என்பது தனது உறுப்பினர்கள் அனைவருக்கும் பயிற்சிகளை வழங்கி அமைதியும் ஒழுங்கும் கொண்ட ஒரு சிறந்த சமுதாயம் அமைய அடிப்படையாக விளங்குகின்றது.
* குடும்பம் என்னும் சிறிய அமைப்பில் இருந்துதான் 'மனித சமூகம்' என்னும் பரந்த அமைப்பு உருவாக்கப்படுகிறது.
* குடும்பம் என்னும் சிறிய அமைப்பு ஒழுங்காகக் கட்டமைக்கப்பட்டால் 'மனித சமூகம்' என்ற பரந்த அமைப்பு சிறப்பாகக் கட்டமைக்கப்படும்.

12. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலை :-

இராமன் அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது சமமாக அன்பு காட்டும் பண்பின் அடையாளமாக விளங்குகின்றான். தந்தை, தாய் மீதான அன்பும் உடன்பிறப்பும் ஆகியவற்றை எல்லைகள் அனைத்தையும் கடந்து இராமன் விரிவுபடுத்துகிறான். வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேறுபாடுகள் அவன் அன்பிற்குத் தடையாக இருக்கவில்லை.



Scanned with CamScanner
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

மகன் என்ற உறவுநிலை :-

* சீதையை இராவணன் சிறை எடுத்துச் சென்ற போது அதனைத் தடுத்து இராவணனுடன் போரிட்டு, காயம் அடைந்து பின் உயிர் துறந்தான் சடாயு.
* கேள்விப்பட்ட இராமன் மிகுந்த வருத்தமடைந்தான்.
* தன் தந்தை தசரதனின் நண்பரான சடாயுவை தன் தந்தையாகக் கருதி, தந்தைக்கு மகன் செய்யும் இறுதிச் சடங்குகளை முறையாகச் செய்தான்.
* தன்னுடைய நினைத்துத் தவம் செய்து கொண்டிருந்த எளிய முதியவளான சபரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான்.
* அவள் இராமனைப் பார்த்ததால் தான் மேற்கொண்ட தவம் பலித்தது என்று கூறி இனிய உணவுகளை விருந்தாகப் படைத்தாள்.
* அவள் அன்பில் மனம் மகிழ்ந்த இராமன் தன் தாயாக அவளை நினைத்து, மகன் தாய்க்குச் செலுத்தும் அன்பைச் செலுத்தினான்.

உடன்பிறப்பு என்ற உறவுநிலை :-

* தன்மீது அளவற்ற அன்பைக் கொண்டிருந்த குகன், தன்னைப் பிரிய மனமில்லாமல் வருந்துவதை இராமன் அறிகின்றான்.
* இராமன் குகனிடம், "முன்பு உடன் பிறந்தவர்கள் நான்கு பேராக இருந்தோம். இப்போது உன்னையும் சேர்த்து ஐந்து பேராக உள்ளோம்" என்றான்.
* இலங்கைச் சென்று இராவணனுடன் கடும்போர்புரிந்து திரும்பிய சுக்ரீவன் செயலைக் கண்டு வியந்த இராமன் சுக்ரீவனிடம் நீ வேறு நான் வேறல்ல; என்று கூறுகின்றான்.



Scanned with CamScanner
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

* அத்துடன் சுக்ரீவனையும் தன் உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்கின்றான்.
* சீதையைக் கவர்ந்து வந்த இராவணனின் செயலைக் கண்டித்தான் வீடணன். இராவணன் அவனைக் கடிந்து கொண்டதால் இலங்கையை விட்டு வெளியேறிய வீடணன் இராமனிடம் அடைக்கலமானான்.
* வீடணனுக்கு இலங்கையை ஆளும் உரிமையைக் கொடுத்ததுடன் அவனையும் தன் உடன்பிறப்பாக இராமன் ஏற்றுக் கொள்கின்றான்.

இவ்வாறாக இராமன் பணியாளனாய்; சகோதரனாய்; தந்தைக்கு ஏற்ற மகனாய்; தாய் மீது அன்பு கொண்ட சேயாய்; உயிர்தரும் நண்பனாய்; உரிமையை வழங்கும் உடன்பிறப்பாய் பிற உயிர்களுடன் உறவு கொண்டிருந்தார்.

13. "உரிமைத்தாகம்" கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் .... கதை :-

கதைச்சுருக்கம் :-

பூமணி அவர்கள் இயற்றிய 'உரிமைத்தாகம்' என்னும் கதையில் வெள்ளைச்சாமி தன் அண்ணனுக்குத் தெரியாமல் தன் வேளாண் நிலத்தை பங்காரு சாமியிடம் இருநூறு ரூபாய்க்கு அடகு வைக்கிறான். அதை அவனது அண்ணன் முத்தையனிடம் அவனது மனைவி மூக்கம்மா கூறுகிறாள். தம்பியிடம் மனவருத்தத்தில் பேசாமல் இருந்தாலும் பாசத்தினால் அவனது நிலத்தை மீட்க பங்காரு சாமியிடம் சென்று நிலத்தை மீட்க இருநூறு ரூபாயைக் கொடுக்கும் போது அவர் நானூறு ரூபாய் என்று பொய் சொல்கிறார். எனவே, சகோதரர்கள் இருவரும் இணைந்து



Scanned with CamScanner
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

பங்காரு சாமியும் சண்டையிடுகின்றனர்...

இரு சகோதரரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதை தொடர்கிறது...

'என்னத்த சொல்ல உங்க தம்பி நித்த அடி வச்சிருக்காராம் ~~[illegible]~~... பிழைப்பு ஒரே சண்டையா இருக்குது ... என்ற முத்தம்மாவின் பேச்சிற்கும் கொஞ்சமும் காது கொடுக்காமல் முத்தையன் தன் வேலையிலே மும்முரமா இருந்தான் என்னாது நான் சொல்லுறது காதுல விழுகுதா! என்ற மனைவியின் பேச்சுக்கு, 'இப்ப என்ன கொறஞ்சு போச்சு நம்ம பேச்சு கேட்காம போனவன்தானே, அவன் எப்பாடு பட்டா நமக்கென்ன, நமக்கு இருக்கிற கஷ்டத்தில இது வேறயா?

அந்த பங்காரு சாமி வேற பொல்லாத மனுசன் கிரயம் வாங்கிட்டுதான் பூமி கொடுத்திருப்பான்... நான் கேட்க போனா அவன் கோர்ட் கேஸ்னு நம்மள போட்டு அலைப்பான்... இது நமக்குத் தேவையா?

இந்த வெள்ளச்சாமி பையன் கொஞ்சமாவது பொறுப்போட நடக்கண்டாமா? அவன் என்னப் பத்தியும் உன்ன பத்தியும் ஊருக்குள்ள என்னவெல்லாம் சொல்லிருக்கான்.... பட்டு அனுபவிச்சாதான் தெரியும்... அவன் நிலத்த இழந்திட்டு நம்மக்கிட்ட திரும்ப வந்தாதான் நமக்கு அருமை தெரியுமுன்னு சொன்னா தன் கணவனைப் பார்த்து முத்தம்மா பதில் எதுவும் பேசாமா இருந்தாள்.

Kaveri Stationery & Papers, Salem



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

மந்திரிப்பை இவர்கள் அந்த சுந்தர வேலை முத்தையனின்
நண்ட எழுத்துப் போனசிலை வைத்திருக் கிடைக்கினார்.
பக்கங்களாக தெரிவதைக்கிட பெரியது. அவர் காது
கேட்காது இருந்தது. 'டே தெய்வராசா! நியாயம்
படிக்கக்கூடிய நான் தேடிக்கொண்டு, என்ன பண்ண
போற என்றால் நோடு வெற இல்ல நிக்கு எதிர்
பாடம்' என்ற வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டு
இருந்தன.

இரண்டு வாரம் கழித்து தெய்வராசாமியின்
நேர்த்தி பங்காளி தாம் எழுதிவாங்கியதையும், அதனால்
தெய்வராசாமியின் மனைவி கோபப்பட்டுக்கொண்டு அது அப்பா
வீட்டுக்கு போய் விட்டதாகவும், தெய்வக்காள் இப்போது
கடன்கார எவரிடமோ போவதாக முத்தம்மா கூறிய
வார்த்தைகளைக் கேட்ட முத்தையாவின் உள்ளம்
துடிதுடித்தது. அப்படியே வீட்டின் மேற்கூரையை
வெறித்து பார்த்தபடி முத்தையன் நின்று கொண்டிருந்தார்.

IV/14 10/பா

## கம்பராமாயணம்

"குகனொடும் ஐவர் ஆனோம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனோம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை."

எம்.ஏ. ஜெஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேல்நிலைப்பள்ளி
நாகர்கோவில்-4.
9843448095

Kaveri Stationery & Papers, Salem



Scanned with CamScanner
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 7

## இலக்கணம், மொழிப்பயிற்சி

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண்: 50

குமரி தமிழமுது

எம். ஏ. ஜெலஸ்டின்

I. அனைத்திற்கும் விடை தருக 25×2 : 50

1. இலக்கணக்குறிப்புத் தருக

அ) நுந்தை ஆ) தாழ்கடல்

2. உறுப்பிலக்கணம் தருக

அ) பொலிந்தான் ஆ) தந்தனன்

3. புணர்ச்சி விதி தருக

அ) அருங்கானம் ஆ) உன்னுடையது

4. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

அ) கொண்டு ஆ) தானே

5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.

6. திருவளர்ச் செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

7. சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக்கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



குமரி தமிழருவி | எம்.ஏ. ஜெலஸ்டின்

8. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க

மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

9. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

அ) நரை, நறை ஆ) கல், கள்

10. தமிழாக்கம் தருக

அ) Lobby ஆ) Tips இ) Checkout ஈ) Mini Meals

11. கலைச்சொல் தருக

அ) Update ஆ) Upload

12. சரியான நிறுத்தற்குறியீடுகளை இட்டு எழுதுக

அ) என் பொய்யான உலகப்பற்று அழிந்தது அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது என் பிறவி ஒழிந்தது என்று கூறினாள்

ஆ) தொல்காப்பிய நூற்பா இல் மனை ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகின்றது

13. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

அ) தாய்வழி சொத்துக்கள் பெண்டிருக்கே போய் சேர்ந்தன

ஆ) இரட்டைகிளவி சொற்களை சேர்த்து எழுத வேண்டும்

14. விடைக்கேற்ற வினா அமைக்க

அ) மனை என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளது.

ஆ) யாவரும் கேளிர் என்பது தமிழர் நற்பண்பின் வளர்ச்சி

15. தொடரில் உள்ள வாக்கியப்பிழைகளை நீக்கி எழுதுக

அ) அவன் அல்ல அ) அங்கே தெரிவது என் வீடு

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



 எம். ஏ. ஜெலஸ்டின்

16. இணைச்சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக

அ) வாடிவதங்கி ஆ) குறுக்கும்நெடுக்கும்

17. தமிழாக்கம் தருக

அ) Nip the briar in the bud.

ஆ) The mill of God grinds slow but sure.

18. எழுத்துப்பிழைகளை நீக்கி எழுதுக

அ) ஒடம்பு வலிக்கு வெண்ணீர் ஒற்றடம் கொடுத்தாங்க

ஆ) ஆற்றில் வெல்லம் வந்தது. வீட்டில் வெள்ளம் இருக்கிறது.

19. மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக

அ) கோழிக்கூடம் ஆ) சுக்குத்தோட்டம்

20. கொச்சைச் சொற்களை நீக்கி எழுதுக

அ) வலது பக்க சுவற்றில் எழுதாதே

ஆ) இன்னக்கி சாயங்காலம் தங்கச்சி வரும்.

21. பேச்சுவழக்குச் சொற்களை எழுத்துவழக்குச் சொற்களாக மாற்றி எழுதுக

அ) அப்படியென்னடா வந்துருச்சு பாடுபடுற நெலத்த எழுதிக் குடுக்கணும்னு.

ஆ) இந்தப் பேச்செல்லாம் வேணாம். நல்லபடியா காரியத்த முடிச்சிட்டு போகலாம்னு வந்தேன்.

22. மரபுத்தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக

அ) மணப்பால் குடித்தல் ஆ) சீட்டுக் கிழிந்துவிட்டது.

23. உவமைத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக

அ) கரை காணாக் கப்பல் போல

ஆ) சுடச்சுடரும் பொன்போல

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

24. வடமொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழ்ச் சொற்களால் எழுதுக

அ) புஷ்பங்களைப் பறித்து பூஜைக்குப் போடு

ஆ) நான் செய்த தவறுக்குச் சகல ஜனங்களும் என்னை க்ஷமித் தருள வேண்டும்.

25. கீழ்க்காணும் சொற்களுக்கு வேர்ச்சொல், தொழிற்பெயர், வினையெச்சம், வினையாலணையும் பெயர் ஆகியவற்றை எழுதுக.

அ) கொண்டான்    ஆ) நோக்கினான்

எம். ஏ. ஜெலஸ்டின்,
முதுகலைத் தமிழாசிரியர்,
கார்மல் மேனிலைப்பள்ளி,
நாகர்கோவில்
9843448095



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 7

## இலக்கணம், மொழிப்பயிற்சி

வகுப்பு : 12 விடைகள் மதிப்பெண் : 50

I அனைத்திற்கும் விடை தருக :-

1. இலக்கணக் குறிப்பு

அ) நுந்தை - நும் தந்தை என்பதன் மரூஉ

ஆ) தாழ்கடல் - வினைத்தொகை.

2. உறுப்பிலக்கணம்

அ) பொலிந்தான்

பொலிந்தான் = பொலி + த் (ந்) + த் + ஆன்

பொலி - பகுதி

த் - சந்தி (ந் ஆனது விகாரம்)

த் - இறந்தகால இடைநிலை

ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

ஆ) தந்தனன்

தந்தனன் = தா (த) + த் (ந்) + த் + அன் + அன்

தா - பகுதி (த எனக் குறுகியது விகாரம்)

த் - சந்தி (ந் ஆனது விகாரம்)

த் - இறந்தகால இடைநிலை

அன் - சாரியை

அன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

Kaveri Stationery & Papers, Salem



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

3. புணர்ச்சி விதி

அ) அருங்கானம்

அருங்கானம் : அருமை + கானம்

(1) ஈறுபோதல் விதிப்படி
அரு + கானம்

(2) இனமிகல் விதிப்படி
அருங்கானம் என்றாயிற்று.

ஆ) உன்னுடையது

உன்னுடையது : உன் + உடையது.

(1) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
உன்ன் + உடையது

(2) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
உன்னுடையது என்றாயிற்று.

4. கீழ்க்காணும் சொல்லுருபுகளை இணைத்தும் பிரித்தும் இருவேறு தொடராக மாற்றுதல் :-

அ) கொண்டு

1. சோமு கையில் கத்திக் கொண்டு ஓடினான்.
2. சோமு கத்திக்கொண்டு ஓடினான்.

ஆ) தானே

1. கண்ணன்தானே படித்தான்.
2. கண்ணன் தானே படித்தான்.

Karan Stationery & Papers, Salem



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

5. தொடர்களை எழுதும்போது காற்புள்ளியிடாமல் எழுதினாலோ, இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ, தொடரில் உள்ள சொற்கள் அத்தொடருக்குரிய முறையான பொருளைத் தராமல் மாறுபட்ட பொருளைத் தரும்.

சான்று

1 அவள், அக்கா வீட்டிற்குச் சென்றாள்.

2 அவள் அக்கா, வீட்டிற்குச் சென்றாள்.

முதல் தொடரில் அந்தப்பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் என்ற பொருளை உணர்த்துகிறது அத்தொடரின் காற்புள்ளி.

இரண்டாவது தொடரில் உள்ள காற்புள்ளியால் அந்தப் பெண்ணின் அக்காள் அவளது (தனது) வீட்டிற்குச் சென்றாள் என்ற பொருள் வேறுபாட்டைத் தருகிறது.

6. 'திருவளர்செல்வன்' என்ற தொடரே சரியான தொடர். 'வினைத்தொகை சொல்லுக்கிடையில் வல்லினம் மிகுதல் கூடாது' என்ற இலக்கண விதியின் படி 'திருவளர்செல்வன்' என்ற வினைத்தொகை சொல்லுக்கு இடையே வல்லினம் மிகாது.



Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

7. இரட்டைக்கிளவித் தொடர்கள் – சலசல, கலகல தொடரில் இரட்டைக்கிளவி சொற்களை எழுதும்போது சேர்த்து எழுத வேண்டும்.

சான்று

1. நிர்மலா பட படவென்றுப் பேசினாள். (தவறு)
   நிர்மலா படபடவெனப் பேசினாள். (சரி)

2. மழை சட சடவெனப் பெய்தது. (தவறு)
   மழை சடசடவெனப் பெய்தது. (சரி)

8. மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

வரிசையில்நின்று கண்காட்சியைக் கண்டனர் அறிவியல் மாணவர்கள்.

9. அ) நரை - வெள்ளைமுடி
நறை - தேன்

நறையைத் தலையில் தேய்த்தால் நரை ஏற்படும் என்று முன்னோர்கள் கூறுவார்கள்.



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

ஆ) கல் - பாறை

கள் - மது

கள்ளுண்டவன் கல் தடுக்கித்தடுமாறி கீழே விழுந்தான்.

10. தமிழாக்கம்

அ) Lobby - ஓய்வறை

ஆ) Tips - சிற்றீகை

இ) Checkout - வெளியேறுதல்

ஈ) Mini meals - சிற்றுணவு

11. கலைச்சொல்

அ) Update - நடப்பாக்கு

ஆ) Upload - பதிவேற்று

12. நிறுத்தற்குறி இடுதல்

அ) "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது" என்று கூறினான்.

ஆ) தொல்காப்பியம் நூற்பா, 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகின்றது.



Scanned with CamScanner

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

13. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல் :-

அ) தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன.

ஆ) இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

14. விடைக்கேற்ற வினா

அ) வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல் எது?
(அல்லது)
மனை என்பது எதனைக் குறிக்கும் முதன்மைச்சொல்.

ஆ) தமிழர் நற்பண்பின் வளர்ச்சி எது?

15 தொடரில் உள்ள வாக்கியப் பிழைகளை நீக்குதல் :-

அ) அவன் அல்லன்

ஆ) அங்குத் தெரிவது எனது வீடு

16. இணைச்சொற்களை வாக்கியத்தில் எழுதுதல் :-

அ) வாடி வதங்கி

தண்ணீர் இன்றி வாடி வதங்கி நின்ற பயிர்கள் மழை பெய்ததால் செழித்து வளர்ந்தன.

ஆ) குறுக்கும் நெடுக்கும்

கடன் பிரச்சனையில் சிக்கிய கோபு அதனை எப்படித் தீர்ப்பது என்று அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

Kaveri Stationery & Papers, Salem.



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

17. தமிழாக்கம்

அ) முன்னை முனையிலே கின்ரு.

ஆ) அரசன் அன்று கொன்வான். தெய்வம் நின்று கொல்லும்.

18. எழுத்துப்பிழைகளை நீக்கி எழுதுதல் :-

அ) உடம்பு வலிக்கு வெந்நீர் ஒத்தடம் கொடுத்தார்கள்

ஆ) ஆற்றில் வெள்ளம் வந்தது. வீட்டில் வெல்லம் இருக்கிறது.

19. மரபுப்பிழைகளை நீக்குதல்

அ) கோழிக் கூடம் - கோழிப் பண்ணை

ஆ) சவுக்குத்தோட்டம் - சவுக்குத்தோப்பு.

20. கொச்சைச் சொற்களை நீக்குதல் :-

அ) வலப்பக்கம் சுவற்றில் எழுதாதே.

ஆ) இன்றைக்குச் சாயுங்காலம் தங்கை வருவாள்.

21. பேச்சுவழக்கை எழுத்துவழக்காக மாற்றுதல் :-

அ) அப்படியென்ன வந்துவிட்டது பாருபடுகின்ற நிலத்தை எழுதிக்கொடுக்க வேண்டுமென்று.

ஆ) இந்தப் பேச்செல்லாம் வேண்டாம். நல்லபடியாகக் காரியத்தைமுடித்துக் கொண்டு போகலாமென்று வந்தேன்.



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

22. மரபுத்தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல் :-

அ) மனப்பால் குடித்தல் - கற்பனை செய்தல்.

ஏறிய விலைவாசி இறங்கும் என்று சிலர் மனப்பால் குடிக்கிறார்கள்.

ஆ) சீட்டுக் கிழிந்துவிட்டது - வேலை போய் விட்டது.

நந்தன் ஊதிய உயர்வுக்காகத் தலைமை தாங்கிப் போராடினான். முதலாளி அவன் சீட்டைக் கிழித்துவிட்டார்.

23. உவமைத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்தல் :-

அ) கரை காணாக் கப்பல் போல

பொருள் : கரையைக் காணாமல் நடுக்கடலில் தவிக்கும் கப்பல்.

பயன்பாடு : தவிப்பு

எ.கா

கூட்டத்தில் தன் தாயைக் காணாத குழந்தை கரை காணாக் கப்பல் போலத் தவிதவித்தது.

ஆ) சுடச்சுடரும் பொன் போல

பொருள் : நெருப்பில் சுடச்சுட பொன் மிளிரும்

பயன்பாடு : அனுபவத்தால் தேர்ந்தவர் ஆதல்

எ.கா

சுடச்சுடரும் பொன் போல, வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்கள் நம்மைச் செம்மைப்படுத்துகின்றன.



Scanned with CamScanner
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

24. வடமொழிச் சொற்களை நீக்கி தமிழில் எழுதுதல் :-

அ) மலர்களைப் பறித்து வழிபாட்டிற்கு போடு.

ஆ) நான் செய்த தவறுக்கு மக்கள் அனைவரும் என்னை மன்னித்தருள வேண்டும்.

25 அ) கொண்டான்

வேர்ச்சொல் – கொள்

தொழிற்பெயர் – கொளல்

வினையெச்சம் – கொண்டு

வினையாலணையும் பெயர் – கொண்டவர்.

ஆ) நோக்கினான்

வேர்ச்சொல் - நோக்கு

தொழிற்பெயர் - நோக்குதல்

வினையெச்சம் - நோக்கி

வினையாலணையும் பெயர் - நோக்கியவன்.

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில்- 4.
9843 448095

Kaveri Stationery & Papers, Salem.



Scanned with CamScanner
Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 8

## செய்யுள், உரைநடை, இலக்கணம்

## குறுவினா

வகுப்பு : 12

நேரம் : 1 மணி

மதிப்பெண் : 50

இனி தமிழமுது

எம்.ஏ. ஜெஸ்லின்

I. அனைத்திற்கும் விடையளி

1. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
2. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
3. "துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது"? என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?
   அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
   ஆ. சிறு துரும்பும் பல்குத்த உதவும்
4. இன்முகத்துடன் வரவேற்க வேண்டியவை எவை?
5. கௌரவமாக நடத்தப்பட்ட விருந்தினர்களால் நமக்குக் கிடைப்பது என்ன?
6. இராமன் குகனிடம் கூறியவை யாவை?
7. இராமன், சவரியிடம் பரிவுடன் கேட்டது என்ன?
8. இராமனும் சுக்ரீவனும் ஒருங்கே தோன்றிய காட்சியைக் கம்பர் எங்ஙனம் வருணிக்கிறார்?
9. தமிழர் நற்பண்பின் வளர்ச்சி, மலர்ச்சி, முதிர்ச்சி, தொடர்ச்சி எனப் பாடப்பகுதிக் குறிப்பிடுபவை யாவை?

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



குமரி தமிழமுது | எம்.ஏ.ஜெலஸ்டின்

10. இராமனிடம் அடைக்கலமானவர் யார்? அடைக்கலமாகக் காரணம் என்ன?

11. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

12. 'மணந்தகம்' என்றால் என்ன?

13. எக்குழந்தையின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது? ஏன்?

14. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக

15. 'பக்தவத்சல பாரதி' அவர்கள் எழுதிய நூற்களில் சிலவற்றை எழுதுக.

16. இளமகவு நிலைக் குடும்பங்களின் காட்சிக்கு ஒரு சான்று தருக.

17. வாழிடத்திற்கு வழங்கும் வேறுபெயர்களாகத் தொல்காப்பியம் குறிப்பிடுபவை யாவை?

18. தொடக்க நிலை நெருங்கமான குடும்பம் என்பது யாது?

19. 'விரிந்த குடும்ப முறை' என்றால் என்ன?

20. 'குடும்பம் மனித சமூகத்தின் அடிப்படை அலகு' - விளக்குக.

21. கீழ்க்காணும் சொற்குறுபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடரமைக்க

அ) கொண்டு < ஆ) விட்டான் <

22. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.

23. தொடர்களில் சொற்களை இடம்விட்டு எழுதும்போது பொருள் மாறுபடுவதற்கு இரண்டு சான்று தருக.

24. தொடரமைப்பை மாற்றினால் பொருள் மாறிவிடும் என்பதற்கு உரிய சான்று தருக.

25. கீழ்க்காணும் இடைச்சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடரமைக்க

அ) முன் < ஆ) கண் <

எம்.ஏ.ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேல்நிலைப் பள்ளி,
நாகர்கோவில்
9843448095

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

இனிய தமிழ்ப்பயிற்சி எம்.ஏ. ஜெபகுமார்

# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 8

## செய்யுள், உரைநடை, இலக்கணம்

## குறுவினாக்கள்

வகுப்பு : 12 விடைகள் மதிப்பெண் : 50

I அனைத்திற்கும் விடையளி :-

1. பொய்யான உலகப்பற்று அழிந்து போகக் கூடியது. உலகத்தின் மீது பற்றுக் கொள்வது வீணாகும். என் மண்ணுலகப் பிறவி அழிந்தது. ஏனெனில் நிலையாமை என்பது உலக வாழ்வு நிலை இல்லாதது என்பதைக் குறிப்பதாகும்.

2. மனித வாழ்க்கையில் நடக்கின்ற எதிர்பாராத நிகழ்வுகளான பேர் ஆனந்தம், சிற்று மனச்சோர்வு, சிறிது அற்பத்தனம், நொடிப்பொழுதேயான விழிப்புணர்வு எல்லாம் நமது இல்லத்திற்கு வரும் எதிர்பாராத விருந்தாளிகளாக உருவகப்படுத்தியிருக்கிறார்.

3. நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்ற பழமொழிக்கு இப்பாடலடிகள் பொருந்தும்.

விளக்கம்

குகனின் வருத்தத்தை உணர்ந்த இராமன் கூறியது. துன்பம் ஒன்று இருந்தால் இன்பம் என்பது புலப்படும் என்பதே பொருத்தம்.

Kaveri Stationery & Papers, Salem.



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



4. இன்முகத்துடன் வரவேற்க வேண்டியவை :-

வக்கிரம், அவமானம், வஞ்சனை முதலியவற்றை வாசலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

5. நாம் சந்திக்கும் அனைத்து விருந்தினர்களையும் கௌரவமாக நடத்தினால் அந்த விருந்தினர்கள் மூலம் புதிய மகிழ்ச்சியும், புதிய அனுபவங்களும் நமக்கு ஏற்பட்டு நாம் புதுப்பிக்கப்படுவோம்.

6. இராமன், குகனிடம் நீ என் தம்பி; இலக்குவன் உனக்கும் தம்பி; என் மனைவியாகிய சீதை உன் உறவினள்; கடலால் சூழப்பட்ட இந்நிலவுலகம் முழுவதும் உனக்கு உரியது. நான் உன்னுடைய கட்டளைக்கு ஏற்ப பணிபுரியும் பணியாளாவேன்.

7. இராமனை நினைத்துத் தவமிருந்து வாழ்ந்து வந்த சவரியிடம் இராமன், "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?" என்ற பரிவுடன் கேட்டான்.

8. ஆசையை முற்றிலும் அழித்த அறிவுடையவனான இராமனும், வானரத் தலைவனான சுக்ரீவனும் பகைவரை அழித்து அறங்களை நிலைபெறச் செய்ய ஒருங்கே தோன்றிய காட்சியானது அமாவாசைக் காலத்தில் வந்து ஒன்றாகக் கூடும் சந்திரனையும் கதிரவனையும் ஒத்து

Kaveri Stationery & Papers, Salem.

இருந்ததாகக் கம்பர் வருணிக்கின்றார்.



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

9. தமிழர் நற்பண்பின் வளர்ச்சி – "யாவரும் கேளிர்" என்பதாகும்.

தமிழர் நற்பண்பின் மலர்ச்சி – 'சிறியோரை இகழ்தல் இலமே' என்பதாகும்.

தமிழர் நற்பண்பின் முதிர்ச்சி – 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதாகும்.

தமிழர் நற்பண்பின் தொடர்ச்சி – 'காக்கை குருவி எங்கள் ஜாதி'.

10. இராமனிடம் அடைக்கலமானவர் வீடணன். தன் அண்ணனாகிய இராவணன் சீதையைக் கவர்ந்து வந்தது தவறென எடுத்துக் கூறினான். இராவணன் கோபப்பட்டு வீடணனைக் கடிந்தான். எனவே, வீடணன் இலங்கையை விட்டு இராமனிடம் அடைக்கலமானான்.

11. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

12. மணந்தகம் :

மணம் புரிந்து கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடத்தொடங்கிய தொடக்க நிலையை மணந்தகம் என்பர்.

முதல் குழந்தை பிறக்கும்வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கும்.

Kaveri Stationery & Papers, Salem.



Scanned with CamScanner

Scanned with CamScanner

13. பெண் குழந்தையின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன. தாய்வழிக் குடும்பங்களின் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவராக இருந்தனர். எனவே பெண்குழந்தையின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது.

---

14. புக்கில் :

புக்கில் என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிக்கும். "துகள் அறுகேள்வி உயர்ந்தோர் புக்கில்" என்ற புறநானூற்றுப் பாடலில் வரும் 'புக்கில்' என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிக்கின்றது.

தன்மனை :

திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் இடம் 'தன்மனை' என அழைக்கப்பட்டது.

---

15. இலக்கிய மானிடவியல், தமிழர் மானிடவியல், தமிழகப் பழங்குடிகள், பாணர் இனவரைவியல், வரலாற்று மானிடவியல், தமிழர் உணவு, திராவிட மானிடவியல்.



Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



16. "மறியிடைப் படுத்த மான்பிணை போல"

(ஐங்குறுநூறு 401)

தம் குட்டி இடையே படுத்திருக்க அதன் இரு மருங்கும் படுத்திருக்கும் மானும் அதன் பிணையும் போல் தம் புதல்வன் நடுவே படுத்திருக்க நம் மகளும், அவள் கணவனும் புதல்வனின் இருமருங்கும் படுத்திருந்தனர்.

17. வாழிடத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள்:-

இல், மனை.

18. தாய், தந்தை, குழந்தை மூவரும் உள்ள தனிக்குடும்பமே மிகவும் நெருக்கமானது. இதனையே தொடக்கநிலை நெருக்கமான குடும்பம் என்பர்.

19. தலைவன், தலைவி, குழந்தைகள் எனத் தனியாக வாழும் தனிக்குடும்ப அமைப்பில் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழ்வது 'விரிந்த குடும்ப முறை' என்றழைக்கப்படும்.

20. குடும்பம் என்கின்ற சிறிய அமைப்பில் இருந்து மனித சமூகம் என்கின்ற பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. இந்தக் குடும்ப அமைப்பு குலம், கூட்டம், பெருங்குடி, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவடையும். எனவே, 'குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகு' என்பதை அறியலாம்.



Scanned with CamScanner

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

21. அ) கொண்டு

1. சோழ கையில் கத்திக் கொண்டு ஓடினான்.
2. சோழ கத்திக்கொண்டு ஓடினான்.

ஆ) விட்டான்

1. அண்ணன் அடித்து விட்டான்.
2. அண்ணன் அடித்துவிட்டான்.

---

22. தொடர்களை எழுதும்போது காற்புள்ளியிடாமல் எழுதினாலோ, இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ, தொடரில் உள்ள சொற்கள் அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் மாறுபட்ட பொருளைத் தரும்.

சான்று

1. அவள், அக்கா வீட்டிற்குச் சென்றாள்.
2. அவள் அக்கா, வீட்டிற்குச் சென்றாள்.

முதல் தொடரில் அந்தப்பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் என்ற பொருளை உணர்த்துகிறது.

இரண்டாவது தொடரில் உள்ள காற்புள்ளியால் அந்தப் பெண்ணின் அக்காள் அவளது (தனது) வீட்டிற்குச் சென்றாள் என்ற பொருள் வேறுபாட்டைத் தருவதை அறியலாம்.

Kaveri Stationery & Papers, Salem.



Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

23. சான்று

1. எம் மொழி யார்க்கும் எளிது - எந்த மொழி யாருக்கெல்லாம் எளிது.
2. அன்றுமுதல் பாடம் கற்றோம் - அன்றிலிருந்து நான் பாடம் கற்றோம்.

24. சான்று

"ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக கூட்டம் நடைபெறும்".

- இத்தொடர் தி.ஜானகிராமன் ஆண்டுதோறும் மறைந்தார் என்னும் தவறான பொருளை உணர்த்துகின்றது.

தொடரமைப்பு மாறினால் பொருள் மாறிவரும். இத்தொடரின் சரியான அமைப்பு 'மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்" என்பதேயாகும்.

25 அ) முதல்

1. அன்றுமுதல் அமைச்சர் வந்தார்.
2. அன்று முதலமைச்சர் வந்தார்.

ஆ) கண்

1. அவன்கண் பெற்று மகிழ்ந்தான்.
2. அவன் கண்பெற்று மகிழ்ந்தான்.

9843448095

எம்.ஏ. ஜெலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி,
நாகர்கோவில்.



Scanned with CamScanner
Scanned with CamScanner